[1984 மார்ச் 7

தூய்மைப் பகுதியாக அறிவிப்பார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குரிய முயற்சியில் ஈடுபடுவதாக உறுதி அளித்தார்கள். இப்போது மத்திய சென்னை மற்றும் தென் சென்னைப் பகுதிகளை தூய்மைப் பகுதியாக அறிவித்து செய்து கொண்டு வருகிறீர்கள். அதேபோல வட சென்னை பகுதியையும் தூய்மைப் பகுதியாக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் உதவி கூட மிக மிகத் தேவை. வட சென்னையைப் பொறுத்தவரையில் வட சென்னை எப்போதுமே வளராத பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே வட சென்னைக்குப் புதிய திட்டங்களை மாநகராட்சி மூலம் கொடுத்து வருகிறோம். குக்ஸ் பிரிட்ஜில் பாலம் கட்டும் வேலை பல்லாண்டுக் காலமாக நடைபெறாமல் இருந்தது. அந்தப் பாலத்தைக் கட்டி இந்த மாதத்தில் முடிக்க இருக்கிறோம். பல்வேறு பணிகளை வட சென்னைக்குக் கொண்டு வர முனைப்பாக இருந்து வருகிறோம் இப்போது சமீபத்திலே நெல்சன் மாணிக்க முதலியார் சாலையில் ஒரு சுரங்கப்பாலத்தை ஏறத்தாழ 1 1/2 கோடி ரூபாய் செலவில் கட்டி திறந்து வைத்திருக்கிறோம். அதுபோன்ற பணிகளை நாம் வட சென்னைக்கு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். வட சென்னையைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல அந்தப் பகுதியில் இருக்கிற பாதைகளில் ஒரு சிலப் பாதைகளை துப்பறவுப் பாதைகளாக, தூய்மைப் பாதைகளாக அறிவிக்க வேண்டுமென்று இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. நான் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றுகிற வகையில் கண்டிப்பாகச் செய்து கொடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓமலூர்—மேச்சேரி சாலையிலிருந்து தொளசப்பட்டி வரை செல்லும் சாலையிலுள்ள பழுதடைந்த பாலத்தைப் புதுப்பிக்கும் திட்டம்.

200—(*வினா எண். 18190)—திரு. செ. செம்மலை; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூர்—மேச்சேரி சாலையிலிருந்து தொளசம்பட்டி வரை செல்லும் சாலையை ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்து அதிலுள்ள பழுதடைந்த பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச்சாலை 9.6 கி.மீ. நீளமுள்ள தார் சாலையாகும். இதில் 0/0-5/6 வரை மற்றும் கி.மீ. 7/2—9/6 வரையிலான பகுதி அரசு மாவட்ட இதர சாலைகளாக நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர சாலையில் கி.மீ. 5/6 முதல் 7/2 வரையுள்ள இடைப்பட்ட பகுதியான 1.6 கி.மீ. தூரம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலுள்ள பகுதியை நெடுஞ்சாலையிடம் ஒப்படைத்து பழுதடைந்த பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு சாலையில் பேருந்து இயங்குகிற நாளிலிருந்து அந்தச் சாலை ஒன்றிய சாலையாக இருந்தாலும், பஞ்சாயத்து சாலையாக இருந்தாலும், நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்வதுதான் நடைமுறையாக இருந்து வருகிறது. இந்தக் குறிப்பிட்ட சாலையைப் பொறுத்தவரையில் 15 ஆண்டுகளாகப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தும் தவறுதலாக விடப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனவே தற்போது பரிசீலனையில் இல்லையென்று சொன்னாலும் அந்தச் சாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக போக்குவரத்து உள்ள சாலையாக இருப்பதால் 4, 5 பேருந்துகள் அதிலே இயங்கிக் கொண்டிருப்பதாலும், அந்தச் சாலை ஒன்றிய சாலையிலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு எடுத்துக்கொள்ளப்படவும், மேலும் அந்தச் சாலையில் இருக்கிற பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்துத் தரவும் அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாலையின் முக்கியத்துவத்தை அறிந்து இந்த ஆண்டிலே அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு அந்தப் பாலம் புதுப்பிக்கப்படும்.

தேனியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம்.

201—(*வினா எண். 18424)—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் ஒரு விளையாட்டு மைதானம் (Stadium) அமைக்க தேனி-அல்லி நகரம் நகராட்சியிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாவை ?